# நிலம் பூத்து மலர்ந்த நாள் – நிலப்பண்பாடு

***முனைவர் போ. அனு,***

***இணைப்பேராசியர், தமிழ்த்துறை, பூசாகோகலைஅறிவியல்கல்லூரி,கோயம்புத்தூர்.***

*DrAnu B, Associate Professor, Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore.*

**ORCID: https://orcid.org/0009-0001-8998-8275**

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ் வியலைப் பிரதிபலிப்பதற்கும் , மகிழ்விப்பதற்கும் எழுந்தது . அனுபவநிலையோடு இணைந்த இயற்கை அறிவியல் நுண்ணறிவை அக்காலமக்கள் பெற்றிருந்தனர் . இதற்குச்சான்றாக சங்க ப்பாடல்கள் விளங்குவதை உணரமுடிகிறது . மக்கள் தங்கள் சார்ந்து வாழும் நிலத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை க்கட்டமைத்தனர். மனோஜ் குரூர் அவர்கள் எழுதிய **நிலம் பூத்து மலர்ந்த நாள்** புதினத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சங்ககால மாந்தரின் நிலம்சார்பண்பாடுகளை எடுத்துரைக்கும் வகையில் இவ்வாய்வு அமைகிறது . இலக்கியம் என்பது கால எல்லை மற்றும் நில எல்லை தாண்டிய பண்பாடு எச்சங்களை ஆகும் . அழிந்து வரும் நம் பழைமையை வரலாற்றுப் புதினங்கள் வழிமீட்டுருவாக்கம் செய்தல் மற்றும் அழிந்து போகாமல் பாதுகாக்கும் கடமையை நினைவுறுத்தும் நோக்கில் அமைந்துள்ளது.

**கலைச்சொற்கள்:**

நிலவியல், பண்பாடு, வாழ்வியல், ஐந்திணை, கொடை, விருந்தோம்பல், நிலையாமை

**முன்னுரை:**

உணவு உடை உரையு ள் போன்று அடிப்படைத் தேவைகளின் தன்மைகள் , நாகரிக வளர்ச்சிகள் , புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பல்துறை அறிவின் நிலைகள் ஆகியவை அவர்கள் சார்ந்துள்ள நிலத்தின் தன்மைக்கேற்பவே அமைகின்றன .இந்நிலையில் முதல் பொருளாக நிலத்தையும் பொழுதையும் தொல்காப்பியர் சுட்டுகிறார். தமிழகத்தின் நிலம்சார் வாழ்வியல் என்பது இன்றும் காலத்தின்தொடர்ச்சியை கொண்டதாகவே உள்ளது . குறிப்பாக ஐந்திணை சார்ந்த வாழ்வியலை சுட்டலாம்.அவ்வகையில்பத்துப்பாட்டு நூல்களுள்ஒன்றான பாணாற்றுப்படை இலக்கியங்கள் சிருபாணாற்றுப்படை மற்றும் பெரும்பானாற்றுப்படையில் இடம் பெற்றுள்ள பாணர்களின் வாழ்வியலைத்தழுவி எழுதப்பட்ட புதினம் ‘நிலம் பூத்து மலர்ந்த நாள்’ ஆகும். இப்புதினம் மொழிபெர்ப்பு இலக்கியமானாலும் வரலாற்றுக்குறிப்புகளோடு இணைந்த தமிழர்பண்பாட்டுச் செய்திகளை காட்சிப்படுத்துகின்றன.

**நிலவியல்பண்பாடு**

பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு , போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மொழி , உணவு,இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் அறிவுநிலைகள் ,கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கும். பொதுவாக இது மனிதரின் நடவடிக்கைகளைக் குறிக்கிறது.உலகின் நிலப்பகுதிக்குரிய பண்பாடுகள் குறிப்பிட்ட நாட்டை சேர்ந்த மக்களாலும் , இனக்குழுக்களாலும் உருவாகின்றன. பண்பாடுகளுக்கு இடையேயான ஒத்ததன்மை பெரும்பாலும் புவியியல் அடிப்படையில் அருகருகே வாழும் மக்கள் நடுவே காணப்படுகின்றது. நிலப்பகுதிக்குரிய பண்பாடுக ளுள்சிலபண்பாடுகள்பிற பண்பாடுகளின் தொடர்பினால் ஏற்படக்கூடிய செல்வாக்கின் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இத்தகைய மாற்றங்கள் தொடர்புகள், குடியேற்றம், வணிகம், புலப்பெயர்வு, மக்கள்ஊடகம், சமயம் போன்றவற்றினால் ஏற்படுகின்றன.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

**நிலம்பூத்துமலர்ந்தநாள்:**

கதையின் மூலமொழி மலையாளம் என்றாலும் தமிழர் (பாணர்) வாழ்வியலை கூறுவதால், இதனை மொழி பெயர்ப்பு நூலாககாண முடியாது, இது தமிழின்மூல மொழி நுலாகவே நோக்கத்தக்கது.பெரும்பாணன், கொலும்பன் – நெல் லிக்கிளி, மயிலன், சித்திரை, உலகன், சீரை, சந்தன் என உள்ளுணர்வால் நகர்த்தப்படும் பாணர் குலம். பரணர் , கபிலர், ஔவை என ஒரு அறிவு குலம். கதையை ஆட்டிவைக்கும் மூவேந்தர்கள் மற்றும் முக்கிய மூ ன்றுகுறுநில மன்னர்கள்(நன்னன் , பாரி, அதியமான்) என ஒரு ஆற்றல் குலம், இவ்வாறு கனகச்சிதமான கதை மாந்தர்களும் கொண்டுள்ளது. வறுமையின் மீதுள்ள வெறுப்பின்காரணமாக மயிலன் தன் வீட்டை விட்டு வெளியேறுகிறான். சிறிது காலத்திற்கு பின், அதே வறுமையை அகற்றும் பொருட்டு பொருள்தேடி வேள்பாரியை சந்திக்க செல்கிறது அவனது குடும்பம். இவ்விரண்டும் இணை க்கதைகளாக மயிலன் மற்றும் கொலும்பன் பார்வையில் நகர்கிறது. மூவேந்தர்களின் சூழ்ச்சிக்கு மகீரனும் மயிலனும் பகடையாகின்றனர். நன்னன் மற்றும் வேள்பாரியை வெல்லும் பொருட்டு மகீரனின் சதியில் , மயிலன் தன்னை அறியாமலே தன் குடும்பத்தை சிக்கவைகிறான். அதனால் தன் தந்தையின் இறப்புக்கு காரணம் ஆகிறான். இதற்கிடையே சித்திரையின் பார்வையிலும் கதை நகர்கிறது. கபிலரும் , ஔவையும் கூட இந்த சூதின் பகடைகளே. இந்நாவலில் சீரையை தவிர பிற அனைவரையும் ஊழே நகர்த்தி செல்கிறது.

**பாணர்களின்வாழ்வியல்:**

பண்டைய தமிழர்கள் இயற்கையோடு வாழ்ந்தனர் . இயற்கையாக கிடைத்த உணவை உண்டு பசிப்போக்கினர். இயற்கையாக கிடைத்த இந்த நிலம்சார் உணவை மட்டுமல்ல அவர்களின் வாழ்வாதாரமும் இயற்கையோடு இணைந்ததாகவே இருந்தது. அந்நிலத்திற்கு ஏற்ப இயற்கையோடு இணைந்த வாழ்வியல் மரபினையும் நிலம் சார்ந்த ஒழுக்கத்தையும் கொண்டிருந்தனர். அவ்வகையில்பாணர்கள்குட்ட நாட்டிலிருந்து குடியேறியவர்கள் முன்னோர்களென்று முதியவர்கள் சொல்லக் கேட் டுள்ளனர். சேரநாட்டரசன் வஞ்சிமாநகருக்கு வந்தபோது அவரைப் புகழ் ந்து பாடல்களும் ஆடல்களுமாக வழங்கினர்.அவர்களுடன் வந்தவர்கள் , அரசர் கைப்பற்றிய ஆனைமலையின் அருகில் குடியமர்ந்தனர். அரசரை மகிழ்விக்கும் பாடல்களுடன் புதிய மொழியாளர்கள் வந்த தும், பாணர்களுடைய மொழிகளின் மதிப்பு குறைந்தது. அதன்பிறகான நாட்களில் அங்கேயும் அயல் தேசங்களிலுமாகச் சில இடங்களுக்குச் சென்று , பாட்டும் கூத்துமாகக் காலம் கடத்தி னர்.பாணர்களின் இருள்மயமாகிய வறுமை வாழ்வைத் தன் கொடைக் கரங்களால் போக்கும் கதிரவ னே வள்ளல்கள் என்று கருதும் நிலையினைக்காணமுடிகிறது. தனியாகவும் கூட்டாகவும் சில வீடுகளுக்குச் சென்று கூலி பேசி முடி ப்பர். பாட்டும் கூத்துமாக இரவைக் கழி த்து, கிடைப்பதைக் கொண்டு திரும்பி வருவர். உழவர்கள் , சான்றோர்கள்ஆகியோர் வீடுகளாயிருந்தால் உணவுகூடுதலாகக் கிடைக்கும்.அங்கே அப்படிப்பட்டவர்கள் குறைவே. சிறுநிலங்களும் மாளிகைகளும் உடையவர்கள் இல்லையென்றே சொல்லலாம். சில மன்னர்களைப் பற்றிய பாடல்களைக் கேட்டறிந்தும் புலவர்களின் பல பாடல்களை க்கற்றறிந்தும் கூத்தினோடு அவற்றை சேர்த்து பாடுவ ர். அப்பாட்டினுள்பாணர்கள்பாதையில்கண்டகுடிகளையும்அவர்களின்வாழ்வியலையும்சேர்த்துபாடுவதைகாணமுடிகிறது.யாழைக் கொண்டு இசையெழுப்பும் பாணனது யாழின் வருணனை , பாணன் வறுமை, உப்பு வணிகர் செல்லும் வழி, எயிற்றியர் குடிசை, பாலை நிலக் கானவர், எயினர் மற்றும் ஐவகை நில மக்களின் வாழ்வியல் போன்றவை பெரும்பாணற்றுப்படையில் இடம்பெற்றுள்ளதைபோலநாவலும்காட்சிப்படுத்தியுள்ளது. இதனைமையமாககொண்டு படைக்கப்பட்டஇக்காலபடைப்புகளில்ஒன்றானநாவல்(நிலம்பூத்துமலர்ந்தநாள்), பாணர்களின்வாழ்வியலோடுஅக்காலசூழலில்வாழ்ந்தமக்களின்நிலம்சார்பண்பாட்டையும்எடுத்துக்காட்டுகிறது. பழங்குடி வாழ்க்கை முறை , நாட்டுப்புற தெய்வங்கள் , கூத்து, காதல், களவு என பழந்தமிழ் மரபு அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

**நிலம்சார்வாழ்விடம்**

பொதுவாகத் தமிழகத்தின் புவியியல் அமைப்புகளை உற்று நோக்கும்போது தோற்ற அமைப்பில் இது தலைகீழாக அமைந்த முக்கோணம் போலவே காட்சியளிக்கிறது. தரைத்தோற்ற அமைப்பிலும் பொதுவாகக் கிழக்கே சரிந்துதான் உள்ளது. இது நிலநடுக் கோட்டின் வடக்கில் வெப்ப மண்டலத்தில் அமைந்திருப்பதாலும், மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதாலும் , கடலிலிருந்து பருவக்காற்று வீசுவதாலும் சம தட்பவெப்ப நிலையை உடையதாக விளங்குகிறது.தமிழகத்திலுள்ள மலைத் தொடர்கள் , குன்றுகள், காடுகள், ஆறுகள் ஆகியன இந்நிலப்பகுதியைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்துள்ளன. இதனையே சங்க இலக்கியங்களில் வரும் குறிஞ்சி , முல்லை, நெய்தல், மருதம் போன்ற நிலப்பிரிவுகள் உணர்த்துகின்றன.

இதன்அடிப்படையில்தான்ஆசிரியரும்பாணர்கள்மூலம்வழித்தடத்தைஅமைத்துக்காட்டியுள்ளார்.குறிஞ்சியின் குளிர்ச்சாரலிலிருந்து பாலையின் அனல்வெம்மை வரை , தனிமையின் ஏக்கத்திலிருந்து அறத்தின் நிலைத்தன்மை வரை என புறத்திலும் அகத்திலுமாக ஒரு முழுமையான வாழ்வனுபவத்தை எழுத்தில் வடித்து தனித்துவமாகவிளங்குகிறதுகதையின்நிலை.
மலைகளில் இருந்து நகரும் கூட்டம் வெவ்வேறு நிலப் பரப்புகளை கடக்கும்பொழுது அந்தந்த நிலத்தின் பூக்களும், வாசனைகளும், மரங்களும், மக்களும், சங்க இலக்கிய பாடல்களில் சொல்லப்பட்டது போல மிக அழகாக காட்சிப் படுத்துகிறார் மனோஜ் குரூர் .வேடர், உழவர், பரதவர் என பலதரப்பட்ட மக்களையும் அவர்களின் விருந்தோம்பல் , உணவுகள், குடில்கள் மட்டுமின்றி அவர்கள் வழிபடும் கோவில்களும் இறைவிகளும் கூட கண்முன்னே வருகின்றன. ஏறுதழுவல் , கூத்தாடல் போன்ற வழக்கங்கள் எல்லாம் துல்லியமாக காட்சிப் படுத்தியது இங்குகவனிக்கத்தக்கதுஆகும்.

**குறிஞ்சிநிலம்சார்வாழ்விடம்**

மலைகளும் குன்றுகளும் அவற்றைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி நில மாகும். இங் கிருக்கும்ஊர்களுக்குக் குறிஞ்சி என்றும் சிறுகுடி என்றும் பெயர். இங்கு வாழ்ந்த மக்கள் குறவர் என்றும் குன்றவர் என்றும் அழைக்கப் பட்டார்கள். இங்குச் சுனை நீர் உண்டு. மலையருவிகளும் உண்டு.இவ்விடத்தைகடக்கும்போதுகுறவர்பாணர்களிடம் "**இருளில் இந்த வழியில் போக முடியாது. சற்று தூரத்தில் மழைக்காலத்தில் பெருக்கெடுத்தோடும் ஆழியாறு வருகிறது. வாய்ப்பிருந்தால் யானையைக்கூட உள்ளிழுத்துக் கொள்ளும் முதலைகள் அதிலிருக்கின்றன "(ப.4). என்றுஒய்விடத்தைக்** காட்டுவதைஅறியமுடிகிறது. பொதுவாக அருவிகள் வேனில் காலத்தில் வறண்டுவிடும். எக்காலமும் ஓடிக் கொண்டிருக்கிற அருவிகள் மிகச் சிலவே. மலைப் பாறைகளுக்கிடையே செடி கொடி மரங்கள் உண்டு. குறிஞ்சிச் செடிகளும் காந்தள் செடிகளும் குறிப்பிடத் தக்கவை. இதனைபாணர்"**காந்தளும் குறிஞ்சியும் பூத்திருக்கவில்லை எனினும் பூக்காலத்தைப் பற்றிய ஒரு நினைவை அவை உள்ளிருத்தி வைத்திருந்தன. வழிப்பயணம் தொடர்ந்தது. கீழே கிளிகள் சூழ்ந்த மூங்கில் காடுகள். மலையுச்சியிலிருந்து பெரியதொரு நீர்வீழ்ச்சி கீழ்நோக்கிய குதிப்பின் இடையில் எங்கோ மறைந்தது ". என்றுதாங்கள்சென்றவழியை காட்டுகிறார்.** மூங்கிற் புதர்கள் உண்டு. வேங்கை , திமிசு, தேக்கு, சந்தனம், அகில், கடம்பு, கருங்காலி முதலான மரங்கள் வளர்ந்தன. "**வழியோரக் காடுகளிலிருந்து அகில் மணம் பரவுகிறது. ஒரு மரக்கிளையிலிருந்து வேறொன்றுக்குத் தாவும் கருங்குரங்குகளைப் பார்த்து நிற்கும் குழந்தைகளை அவர்களின் அம்மாக்கள் கைப்பிடித்து இழுத்துச் சென்றனர். தேனீக்கள் சுற்றும் கூடுகளுக்கு சிலரின் பார்வை சென்றது. சில கடுவன்கள் வழிபோக்கர்களின் தோள் சுமைகளைப் பார்த்து வால் நீட்டி நின்றன".** பறவைகளில் மயிலும் கிளியும் குறிப்பிடத்தக்கவை. புலி, யானை, சிறுத்தைப் புலி, கரடி, காட்டுப் பன்றி, குரங்கு முதலான மிருகங்கள் இருந்தன.

**முல்லைநிலம்சார்வாழ்விடம்**

காடு அடர்ந்த நிலப்பரப்பே முல்லை நிலமாகும். இந்நிலப்பரப்பிற்கு ஒரு தனித்துவம் அங்கே காணப்படும் முல்லைப் பூவாகும்.இங்கு வாழ்ந்தோர் ஆயர் அல்லது இடையர் என அழைக்கப்பட்டனர். இவர்களின் முக்கியமான தொழில் ஆடு மாடுகளை மேய்ப்பதாகும். இவர்கள் இந்நிலப்பரப்பில் கிடைக்கும் பொருட்களான பால் , தயிர், வெண்ணெய் போன்றவற்றைப் பிற நிலப்பரப்பில் உள்ளவர்களிடம் கொடுத்துப் பண்டமாற்றாகத் தமக்கு வேண்டியவைகளைப் பெற்றனர். இங்கு மக்கள் வாழ்ந்த இடங்களைச் சேரி என்று அழைத்தனர். இவர்களின் தலைவர்கள் குறும்பொறை நாடன் என்று அழைக்கப்பட்டனர்.

**மருதநிலம்வாழ்வியல்**

ஆற்றுப்படுகைகள் சேர்ந்த வளமான இடங்கள் மருதம் எனஅழைக்கப்பட்டன. இங்குக் காணப்பட்ட மருதப் பூவே இந்நிலத்திற்கு இப்பெயரை வழங்கியது.மருத நிலத்தில் காணப்பட்ட சமமான தரைப் பகுதி , செழிப்புள்ள மண், போதிய நீர் வசதி ஆகியன ஏனைய நிலங்களைவிட இதனை வளமானதாக ஆக்கின. நெல், கரும்பு போன்றவை விளைய ஏற்ற இடமாக அமைந்ததால் இந்நிலப்பரப்பு தன்னிறைவு அடைந்து மக்கள் நிலையாகத் தங்கும் நகர வளர்ச்சிக்கு அடிகோலியது எனலாம். இப்பகுதியில் மக்கள் வாழ்ந்த இடங்கள் நகர் , ஊர் என அழைக்கப்பட்டன. இம்மக்களின் தலைவர்கள் ஊரன் , மகிழ்நன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

**நெய்தல்நிலவாழ்வியல்**

நெய்தல் பூவே நெய்தல் நிலத்திற்குத் தனித்துவத்தை அளித்தது. தமிழகத்தைச் சுற்றியுள்ள கடற்கரை நிலப்பரப்பு நெய்தல் நிலமாகும்.கடற்கரைப் பகுதிகளான இந்நிலப் பகுதியில் துறைமுகங்கள் யாவும் அமைந்திருந்தன. கடல் வழியாகப் பல அயல்நாடுகளுடன் வாணிபம் நடைபெற்றது. தமிழகத்து மிளகு முதலிய நறுமணப் பொருள்களுக்கும் முத்துகளுக்கும் ஈடாகப் பொன்னையும், மதுவையும் பண்டமாற்றாகப் பெற்றுச் செல்லக் கிரேக்கரும் , உரோமானியரும் மரக்கலங்களில் வந்து சென்றதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. எளிய மக்கள் குடிசைகளில் வாழ்ந்து வந்தாலும் செல்வச் செழிப்பாக வாழ்வைக் களித்தனர். வாணிபம் வளர்ச்சியுற்றதால் துறைமுகப்பட்டினங்கள், நகரங்கள் வளர்ச்சி பெற்றன. சேரரின் துறைமுகங்களாக முசிறி , தொண்டி, மாந்தை, நறவு ஆகியன விளங்கின. சோழரின் துறைமுகப் பட்டினங்களாகக் காவிரிப்பூம்பட்டினம் , நாகப்பட்டினம், பொதுகை அல்லது அரிக்கமேடு ஆகியன விளங்கின. நாவலில், முதன் முதலாக கடலைக் காணும் மயிலன் அதன் தொடுவானுக்கு அப்பால் என்ன இருக்கும் என ஆவலுடன் சிந்திக்கிறான். இப்போது அனைத்திலிருந்தும் தப்பி ஓட , ஏதேனும் யவனக் கப்பலில் ஏறி தமிழ் நிலத்தை விட்டே விலக கடற்க் கரையில் நிற்கிறான்.

**பாலைநிலவாழ்வியல்**

வறட்சியான நிலப்பரப்பினைப் பாலை நிலம் என அழைத்தனர்.இப்பகுதியில் காணப்பட்ட பாலைப்பூவே இப்பெயருக்குக் காரணமாக அமைந்தது. மேற்கூறிய நால்வகை நிலங்களும் வறட்சி அடையும்போது அவை பாலை நிலம் என்று அழைக்கப்பட்டன.முல்லை நிலமாகிய காடுகளும் , குறிஞ்சி நிலமாகிய மலைகளும் நெடுங்காலம் மழை பெய்யாமையால் காய்ந்து வறட்சி அடையும் போது பாலை என்னும் நிலப்பரப்பாகக் காட்சி அளிக்கும் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்தவர்களை மறவர் , எயினர், வேடர் எனப் பலவாறு அழைத்தனர். இம்மக்கள் வாழ்ந்த பகுதிகளைக் குறும்பு என அழைத்தனர். சிறு வயதில் குடும்பம் விட்டு வெளியேறிய மயிலன், கள்வர் கூட்டத்துடன் இணைகிறான், நன்னன் படையால் கைது செய்யப் படுகிறான். அந்நிலையில் பாலைநிலமக்களின் தொழிலானகள்வர்கள் குறித்தும் அவர்களின் வாழ்வியல் குறித்தும் இங்குகாட்டப்படுவதை அறிய முடிகிறது.


© 2025, IRJTSR 

**தொழிலும் உணவும்:**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலத்தின் வழியே பயணப்படும் பாணர்கள்வழி அந்தந்தநிலத்தில்வாழும்சமூக பண்பாடுகளையும் 'நிலம்பூத்துமலர்ந்தநாள்'கதை சிறப்பாக பதிவு செய்துள்ளது. குறவர்கள் , ஆயர்கள், உழவர்கள், பரதவர்கள், மறவர்கள், எயினர்கள் என ஐவகை நில மக்களும் நாவலில் கதாபாத்திரங்களாக வருகிறார்கள்.மலைகளிலும் மலைச்சாரல்களிலும் ஐவன நெல்லையும், தினை என்னும் அரிசியையும் பயிர் செய்தார்கள். மரம் செடி கொடிகளை வெட்டி அப்புறப்படுத்தி வேர்களைக் கிளறிக் கொத்தி நிலத்தைப் பண்படுத்தினார்கள். பண்படுத்திய நிலத்தை மண்வெட்டியால் கொத்திக் கிளறி நெல்லையும் தினையையும் பயிர் செய்தார்கள். இவை வானம் பார்த்த பயிர்கள். பெரும்பாலும் மழையை எதிர்பார்த்துப் பயிரிடப்பட்டவை.

மலையுச்சியிலுள்ள பாறைகளில் மலைத்தேன் கிடைத்தது. வள்ளிக் கிழங்கு பயிராயிற்று. பலா மரங்களிலே பலாப் பழங்கள் கிடைத்தன. யானைகளையும் காட்டுப் பன்றிகளையும் வேட்டையாடினார்கள். தேனை மூங்கிற் குழாய்களில் ஊற்றிப் பதப்படுத்தி ஒருவகை மதுவை உண்டாக்கினார்கள். தினையரிசியிலிருந்தும் மதுபானம் உண்டாக்கினார்கள். மிகத் தாழ்வான சிறிய குடில்களைக் கட்டி அதன்மேல் தினைத் தாளையும்,நெல்லின் தாளையும் கூரையாக வேய்ந்த குடில்களில் வசித்தார்கள். "**வழியறியும் குறவன் , "கற்குகைகள் அவை. இருட்டில் நடந்து செல்ல முடியாத வழியாகையால் ஆட்கள் பொழுது விடியும்வரை அங்கே தங்கிக் கொள்வார்கள். நீங்களும் இன்றிரவு அங்கு தங்கலாம்" என்றுரைத்தகுறவனின்வாய்மொழியால்**இவர்களுடைய வாழ்க்கை கடின வாழ்க்கையாக இருந்தது என்பதுதெளிவாகிறது. மலைத்தேன் , யானைத் தந்தம் , புலித் தோல் , அகில் கட்டை , சந்தனக் கட்டை ஆகியவற்றை விற்றார்கள்.

மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்ததும் முதன் முதலில் முல்லை நிலத்திலாகும்."**வழியோரங்களில் இருந்த வயல்களில் அதற்குள் உழவர் இறங்கியிருந்தனர். களை பறித்த வயல்களில் அவர்கள் காஞ்சிப்பூ உரமாக இடுகின்றனர். சிலர் நீர் நிறைந்த வயல்களில் வாளை மீனைபிடிப்பதற்கான முயற்சிகளில் இருந்தனர் ".** முன் எங்களிடமிருந்தமூட்டைகளோடு அதையும் சுமப்பது கடினம் இருப்பினும் வேண்டாமென்று சொல்லவில்லை. எல்லோரை யும்மீண்டும் ஒருமுறை வணங்கிவிட்டு வயல்கள் பின்னிட நடக்க தொடங்கினோம்'(ப. 95) என்று வழிநெடுக அந்தந்த நிலமக்களின் தொழில் நிலையும் காணமுடிகிறது.

**விருந்தோம்பல்:**

பாணர்களுக்கும் மற்ற எளிய குடிகளுக்குமான உறவு அழகு நிறைந்தது . கதை நெடுக எயினர் , குறவர், உழவர், ஆயர் என எக்குடி ஆகிலும் ''செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்து''(குறள்86) நிற்கிறார்கள்.தமிழ்ப் பண்பாட்டின் சாரமான விருந்தோம்பல் கதைமுழுதும் வந்த வண்ணம்இருக்கிறது.விதவிதமான உணவு முறைகள் , அத்தனை வேற்றுமையும் விருந்தோம்பல் என்ற பண்பாட்டில் ஒற்றுமை கொள்கின்றன. பலவண்ணங்களிலும் பல்வேறுசுவைகளிலும் உணவை பொது நிலைப்படுத்தும் இன்றைய சமூகம்விருந்தோம்பல் என்பது பண்பாட்டின் அடையாளம் என்பதை மறந்து வணிகநாகரிகமாக மாற்றியுள்ளது என்பது வேதனைக்குரியது. பண்பாட்டில் சிறந்து விளங்குவதில் ஒன்று பிறர் இயலாமையைகாணும் போது மனம் இறங்கி உதவுவது பெரும்பண்பாகபார்க்கப்பட்டது.

**"எங்கள் குடில்களுக்கு வந்துவிட்டுச் செல்லுங்கள் மானிறைச்சியும் உடும்பிறைச்சியும் வீட்டில் இருக்கும். வேகவு மூங்கிலரிசியோடு சேர்த்துக் கொதிக்கவைத்த பாலும் இருக்கும் குழந்தைகள் உண்ணட்டும்"**இங்குமலைவாழ்மக்களின்விருந்தும்உபசரிப்பும்காட்சிப்படுத்தப்படுகிறது.

**கொடை**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

கொடை என்பதற்கு தியாகம் என்றும் ஈகைக்கு கொடை , பொன் , கற்பகம் என்றும் பொருள் தருகிறது சென்னை பல்கலைக்கழக தமிழ் பெயர் அகராதி . வறுமையற்றார்க்கு அவர் வேண்டுவன இந்த ஈகை எனவும் பொருள் தெரிகிறது .செல்வத்துப் பய ன்கொடுத்தலாகும். அவ்வா றின்றி, யாமே அனைத்தும் நுகர்வோமென்று யாரும் இருந்து விட முடியாது என்பதை 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே திரவம் எல்லாம் ஓர் ஒக்கும்மே செல்வத்துப் பயனே ஈதல் '(புறம்189) என்று பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டியது ஈதல் அறம் என்று உல கோர்க்கு எடுத்துரைக்கிறது பாடல். இப்பாடல், போர் செய்து நிலம் வெல்லும் அரசர்கள் , பாணர்களின் பாட்டுக்கு அந்நிலத்தையே பரிசாக அளிக்கிறார்கள். நிலம் சுருங்க சுருங்க கைக்கு அகப்பட்டதைப் பரிசாக அளிக்கிறார்கள். பாணர்கள்தங்கள் வறுமையிலும் கையேந்திநிற்காமல் யாழிசைத்து பாடியும் ஆடியும் பின்னர் வள்ளலை புகழ்ந்து பொருளை பெறுகின்ற உயர் பண்பினையும் காணமுடிகிறது. போர் செய்து நிலம் வெல்லும் அரசர்கள் , பாணர்களின் பாட்டுக்கு அந்நிலத்தையே பரிசாக அளிக்கிறார்கள். நிலம் சுருங்க சுருங்க கைக்கு அகப்பட்டதைப் பரிசாக அளிக்கும்கொடைத் தன்மையையும் இங்குகாணமுடிகிறது.

வேல்கெழுகுட்டுவன் பரிசாக அளித்த ஆழியாற்றின் கரையில் அமைந்த உம்பர்க்காட்டில் வசிக்கும் புகழ்வாய்ந்த பெரும் புலவர் பரணரை பாணர்குடிவழியில் சந்திக்க, பரணர் அவர்களுக்கு ஏழிமலை நன்னன் சேரர்களால் வீழத்தப்பட்டதை சொல்லி , ஏழ்மை நீங்க பறம்புமலை பாரியை அணுகச் சொல்லி அதற்கு பாரியின் அணுக்கத் தோழர் பெரும்புலவர் கபிலரின் துணையை நல்கி , ஆற்றுப்படுத்துகிறார்.பாணர்குடி சொந்த ஊர் திரும்பும் வழியில் உம்பர்க்காட்டில் பரணரை சந்திக்கிறார்கள். பரணர் தனக்கு பரிசாகக் கிடைத்த உம்பர்க் காட்டையும் பெரும் செல்வத்தையும் அந்த பாணர் குடிக்கு பரிசளித்து விட்டு சென்று மறைகிறார்.வறண்ட பல நிலங்களை கடந்து நீளும் அவர்களது பயணத்தில் குறவர்களும் , வேடரும் குறுக்கிடுகிறார்கள். ஆடல் பாடல் நிகழ்த்தும் கூட்டமென்றதும் , காட்டிலிருந்து கிடைக்கும் உடும்பு கறியையும், முயல்கறியை சமைத்துக்கொடுத்து பரிமாறுகிறார்கள். சிறுவர்கள் நாக்கு ஊற உணவினை அரக்கப்பரக்க விழுங்குவதை கடிந்துக்கொள்ளும் பெரியவர்களிடத்தில் சுயகௌரவம் மிளிர்கிறது. இங்கு கொடுத்து உதவும் மனப்பாண்மை அரசர்கள் மட்டு மின்றி புலவர்களும் சாதாரணமக்களும் தங்களால் இயன்றதை எவ்விதயோசனையுமின்றி கொடுத்து மகிழும் நிலையையும் காணமுடிகிறது. **"வயல் வரப்பின் பூத்திருந்த நீலப்பூக்களின் வழியாக அவர்களின் பார்வைகள் எங்க எட்டின. அனைவரும் வேலையை நிறுத்தி எங்களைப் பார்த் சிரித்துக் கையசைத்தனர். நாங்கள் தலைகுனிந்து வணங்கி முன்னா நகர்ந்தோம். அதற்குள் பெரும்பயறுகளின் பெரிய கட்டுக எங்களிடம் தருவதற்காகச் சிலர் அருகே வந்தனர்."(ப95)**

**தொகுப்புரை:**

தமிழ்ப் பண்பாட்டை அதன் வேரின் சாரத்துக்கு உயிர் நீராக விழுந்த பாணர்களின் கண்ணீரை தொட்டுப் பேசும் படைப்பு இந்தப் புனைவு.குறவர் இன மக்கள் குறித்தும்வாழ்வுசார் நில அமைப்பு ம் அறியப்பட்டன. அச்சமயம் பாணர்களின் வாழ்க்கையானது இடர்பாடுகளும் துன்பங்களும் நிறைந்ததாகவே காணப்பட்டன.எந்நிலையிலும் தன்னிலை மாறாத பாண ர்கள் எக்காலத்திலும் எதற்காகவும் கையேந்தி நிற்கவில்லை அவர்களின் கலைகளை ப் பயன்படுத்தி அதன்வழி மரியாதைக்குரிய வாழ்விலேயே வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது .ஐவகை நிலங்கள் , நிலங்களின் கருப்பொருட்கள் , சங்ககால தொழில் முறைகள், உணவு வகைகள் என மொத்த சங்க இலக்கிய பாடல்களின் சாரமெனத் திரண்டு வரும் அனைத்தையும் அள்ளமுயன்று அதில் வெற்றியும் பெற்றுள்ளார் நாவலாசிரியர். இதன் உயிர்ப்பும் வீரியமும் குன்றாவண்ணம் தமிழில் மொழி பெயர்த்துள்ள கே.வி.ஜெயஸ்ரீயும் தமிழ் இலக்கிய வாசகர்களால் கொண்டாட படவேண்டியவர்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

துணைநின்றநூல்கள்

[1] பூரணச்சந்திரன் ,(2014 ) ,(மொ) .க ,நிலஅமைப்பும் தமிழ்க் கவிதையும் செவ்வியல் தமிழ்க்கவிதையில் இயற்கை) ,(பற்றியதோர் ஆய்வுநியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர் .சென்னை ,

[2] மனோஜ் கு ரூர், தமிழில் கே , வி ஜெயஸ்ரீ. நிலம் பூத்து மலர்ந்த நாள் , மலையாள மூலம் ,வம்சி புக்ஸ் , திருவண்ணாமலை .6066012.

[3] சங்க இலக்கியத்தில் பொதுமக்கள், முனைவர்,இராசரெத்தினம் .கு. நாம் தமிழர் பதிப்பகம் ,திருவல்லிக்கேணி, சென்னை–5.

[4] ஆ,தனஞ்செயன்.சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும் , நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் , சென்னை - 98.

[5] தட்சிணாமூர்த்தி,சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் , அம்பத்தூர்,சென்னை,600098.

[6] கு.வே. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம்.சென்னை,

[7] பக்தவத்சலபாரதி, சமூகபண்பாட்டுமானிடவியல்அடையாளம், புத்தாநத்தம். 621310

[8] https://tamil.wiki/wiki/%E%0AE%%86E%0AE%A%4E%0AE%BF%E%0AE%AE%E%0AE%A%8E%0AF%8D%E%0AE%A%4E%0AE%BF%E%0AE%AF%E%0AE%BE%E%0AE%B%0E%0AF%8D

[9] http://vaiyan.blogspot.com/.292/08/2014html

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*